மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதிக்குட்பட்ட கஞ்சிக்குழி பகுதியில் உள்ள நூற்பாலையை இன்னும் விரிவுபடுத்த முடியுமா என்று கேட்டிருக்கின்றார்கள். அங்கு, நேரடியாகச் சென்று, துறை அதிகாரிகளோடு ஆய்வு செய்துவிட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 279, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

279—

குடமுழுக்கு

***35992—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், மேலூர் அருள்மிகு திருவுடையம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கலை மகளாய், அலை மகளாய், மலை மகளாய், மூன்றும் ஒருங்கிணைந்த தெய்வத் திருமகளாய் தமிழகத்தை வழிநடத்தி வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 5,351 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு நடைபெற்றுள்ளன என்பதனை இங்கே மகிழ்ச்சியுடன் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

2014 ஜூலை 30]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள திருக்கோயில் குடமுழுக்கு திருப்பணிகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன. மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே வழங்கிய உறுதிமொழியினைத் தொடர்ந்து, இராஜகோபுரம் கட்டுவதற்கு உபயதாரர்கள் கண்டறியப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் திருக்கோயில் நிருவாகத்தால் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள அருள்மிகு திருவுடையம்மன் திருக்கோயில் குடமுழுக்கு மிக விரைவில் நடைபெற, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் 17 இலட்சம் உறுப்பினர்கள் கொண்ட கழகத்தை விட்டுச்சென்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக வரலாற்றிலே உடைந்த கழகத்தை ஒன்று சேர்த்து ஒன்றரை கோடி தொண்டர்களைக் கொண்ட மாபெரும் இயக்கமாக மாற்றினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய தேசத்திலேயே 3-வது கட்சியாக சரித்திர சாதனை படைத்து, இந்திய தேசமே பின்பற்றும் தொலைநோக்குத் திட்டங்களைத் தந்திட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நிகர் அம்மா அவர்களே என்று மாபெரும் சரித்திர சாதனைகளைப் படைத்திட்ட, நான் அனுதினமும் வணங்கும், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதி, மேலூர், அருள்மிகு திருவுடையம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய முன்வந்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இத்திருக்கோயில் மிகவும் பிரசித்திபெற்ற கோயிலாகும். திருவொற்றியூரில் இருக்கின்ற வடிவுடையம்மன், மேலூரிலிருக்கின்ற திருவுடையம்மன் மற்றும் திருமுல்லைவாயிலிலிருக்கின்ற கொடியிடையம்மன் இம்மூன்று கோயில்களையும் ஒரே தினத்திலே வழிபட்டால் நல்ல பலன்கள் கிடைக்கும் என்பது ஐதீகம். மற்ற இரண்டு கோயில்களுக்கும் இராஜகோபுரங்கள் இருக்கின்றன. இந்தக் கோயிலுக்கு 5 நிலைகள் கொண்ட இராஜகோபுரம் அமைப்பதற்கு உபயதாரர்கள் தற்போது காலதாமதம் செய்துவருகிறார்கள். ஆகையால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, துறையின்மூலமாக அங்கு இராஜகோபுரம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், பேரவைத் தலைவர் வந்துவிட்டேன்.

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், மேலூரில் அருள்மிகு திருவுடையம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலின் பசலி வருவாய் ரூ.4,56,274/-. இத்திருக்கோயிலுக்கு புதிய கொடிமரம், மடப் பள்ளி அலுவலகம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. திருக்கோயிலின் சுற்றுப்புறத்தில் கருங்கல் தளம் அமைத்தல் மற்றும் ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டுதல் போன்ற பணிகளுக்காக உபயதாரர்கள் கண்டறியப்படும் பணியினைக் கோயில் நிருவாகம் மேற்கொண்டு வருகிறது.

2014 ஜூலை 30]

வாழும் கர்ணனாக இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் இத்திருக்கோயிலின் பிற புனரமைப்புப் பணிகளுக்காக 13-வது நிதிக் குழுவிலிருந்து ரூ.30 இலட்சம் ஒதுக்கியுள்ளார்கள். தெய்வம் சக மனிதரின்மூலம்தான் நமக்கு உதவி செய்கிறது என்கிற வார்த்தைக்கு அடையாளமாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு, மிக விரைவில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, குடமுழுக்கு நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 280, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

280—

சமுதாய நலக் கூடம்

***22078—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, நாகநல்லூர் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதி, துறையூர் வட்டம், உப்பிலியாபுரம் ஒன்றியம், நாகநல்லூர் கிராமத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, ஆதி திராவிட சமுதாய மக்களுக்கு சமுதாய நலக் கூடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.